*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி - சென்னை - 4*

*20 08 2025 WEDNESDAY 6 45 AM*

*<u>தலைப்புச் செய்திகள்</u>*

1. இந்திய-சீன எல்லையில் தொடர்ந்து அமைதியை நிலைநாட்ட வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2. குடியரசு துணைத்தலைவர் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளராக போட்டியிடும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று தமது வேட்புமனுவை தாக்கல் செய்கிறார்.

3. நெடுஞ்சாலை மற்றும் பொதுப்பணித்துறை பொறியாளர்கள் கட்டுமானப் பணிகள் தரமானதாக அமைவதை உறுதி செய்யுமாறு மாநில அமைச்சர் திரு. எ.வ.வேலு கேட்டுக் கொண்டுள்ளார்.

4. தமிழகத்தில் அம்மா மினி கிளினிக்குகளை மீண்டும் ஏற்படுத்த அஇஅதிமுக முயற்சிகளை மேற்கொள்ளும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

5. ஆசிய துப்பாக்கிச் சுடும் போட்டியில், இந்தியாவுக்கு மேலும் இரண்டு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் கிடைத்துள்ளது.

>>>>>><<<<<<

இந்திய-சீன எல்லைப் பகுதியில் தொடர்ந்து அமைதியை நிலைநாட்ட வேண்டியது அவசியம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் தம்மை சந்தித்த சீன வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. Wang Yi-யுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது, எல்லைப் பிரச்சனையில் இருதரப்பும் ஏற்றுக்கொள்ளக் கூடிய நியாயமான தீர்வு காண இந்தியா உறுதிபூண்டுள்ளதாக அவர் கூறினார்.

கடந்த ஆண்டு, சீன அதிபர் திரு. Xi Jinping-ஐ தாம் சந்தித்த பிறகு, இருதரப்பு உறவுகள் மேம்பட்டு வருவதுடன், கைலாஷ் மானசரோவர் யாத்திரை மீண்டும் தொடங்கியிருப்பது குறித்தும் பிரதமர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

இந்த சந்திப்பின் போது, சீனாவில் நடைபெறவுள்ள ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சிமாநாட்டில் பங்கேற்குமாறு சீன அதிபர் விடுத்த அழைப்பையும் அந்நாட்டு அமைச்சர் திரு. Wang Yi பிரதமரிடம் வழங்கினார்.

>>>>>><<<<<<

குடியரசு துணைத்தலைவர் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளராக போட்டியிடும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று தமது வேட்புமனுவை தாக்கல் செய்கிறார்.

தேர்தல் அதிகாரியான மாநிலங்களவை செயலாளரிடம் அவர் மனுதாக்கல் செய்யவுள்ளார்.

எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி சார்பில் போட்டியிடும் திரு. சுதர்ஸன் ரெட்டி, நாளை மனுதாக்கல் செய்யவுள்ளார்.

இந்த தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நாளையுடன் நிறைவடைகிறது.

நாளை மறுநாள் வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை மேற்கொள்ளப்படும். மனுக்களை திரும்பப் பெற இம்மாதம் 25ஆம் தேதி கடைசி நாளாகும்.

அடுத்த மாதம் 9ஆம் தேதி தேர்தல் நடைபெறும்.

நாடாளுமன்ற இரு அவைகளின் உறுப்பினர்கள் இத்தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்றவர்கள் ஆவர்.

>>>>>><<<<<<<

மோட்டார் வாகன உற்பத்தி துறையில், அடுத்த ஐந்தாண்டுகளில் இந்தியா உலகின் முதல் நாடாக உருவெடுக்கும் என்று மத்திய சாலை போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இதுதொடர்பான ஆய்வறிக்கையை வெளியிட்டுப் பேசிய அவர், நாட்டின் மோட்டார் வாகன தொழில்துறை ஆண்டுக்கு 14 சதவீத அளவிற்கு வளர்ச்சியடைந்து வருவதாக கூறினார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்படும் விரைவுச்சாலை மற்றும் சுரங்கப்பாதைகள் காரணமாக, போக்குவரத்து இணைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதுடன், சரக்கு போக்குவரத்து செலவும், பயண நேரமும் வெகுவாக குறைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வருங்காலத்தில் பசுமை எரிபொருளை பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய திரு. நிதின் கட்கரி, இதனை கருத்தில் கொண்டு, மின்சார வாகனங்கள் மற்றும் பேட்டரி உற்பத்தியில் அரசு தீவிர கவனம் செலுத்தி வருவதாக தெரிவித்தார்.

>>>>>><<<<<<<

அரசு ஊழியர்கள், ஓய்வுபெற்ற பிறகும் அவர்களது திறமை மற்றும் பணி அனுபவம் காரணமாக தேச நிர்மானப் பணியில் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில், ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கான 8வது தேசிய அனுபவ் விருதுகளை வழங்கிப் பேசிய அவர், ஓய்வுபெற்ற ஊழியர்களின் அனுபவம், புதிதாக பணியில் சேருபவர்களுக்கு வழிகாட்டுவதாக இருக்கும் என்று தெரிவித்தார்.

இந்த விருதுகள், ஓய்வுபெற்ற அலுவலர்களை கௌரவிப்பதாக மட்டுமின்றி, ஆட்சி நிர்வாகத்தில் அவர்களது அனுபவங்களை நினைவுகூருவதாகவும் அமையும் என்று திரு. ஜிதேந்திர சிங் குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<<

நெடுஞ்சாலை மற்றும் பொதுப்பணித்துறை கட்டுமானப் பணிகள் தரமானதாக இருக்கும் வகையில் பொறியாளர்கள் பணியாற்ற வேண்டும் என்று அத்துறைக்கான அமைச்சர் திரு. எ.வ.வேலு கேட்டுக் கொண்டுள்ளார்.

*இத்துறைகளில் புதிதாக பணியில் சேரும் உதவிப் பொறியாளர்களிடையே கலந்துரையாடிய அவர், அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 210 பொறியாளர்களில் 91 பேர் மகளிர் என்பது மகிழ்ச்சிக்குரியது என்று தெரிவித்தார்.*

*2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கல்லணையும், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட தஞ்சை பெரிய கோவில் உள்ளிட்ட ஆலயங்களும், தமிழர்களின் பொறியியல் திறமைக்கு சான்றாக விளங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்.*

*புதிதாக பணியில் சேரும் உதவிப் பொறியாளர்கள், கட்டிடங்கள் மற்றும் பாலங்களை கட்டும் போது, மண் மற்றும் தண்ணீர் பரிசோதனை, கட்டுமானப் பொருட்களின் தரத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் திரு.எ.வ. வேலு கேட்டுக் கொண்டார்.*

*>>>>>><<<<<<*

*மாநிலத்தில் அம்மா மினி கிளினிக்குகளை மீண்டும் ஏற்படுத்த அஇஅதிமுக முயற்சிகளை மேற்கொள்ளும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.*

*ராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காட்டில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், கடந்த 2011 முதல் 2021 வரையிலான அஇஅதிமுக ஆட்சியில், சாலைகள், பாலங்கள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டதாக கூறினார்.*

*குடி மராமத்து திட்டத்தின் மூலம். 6 ஆயிரம் நீர்நிலைகள் தூர்வாரப்பட்டதுடன், 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.*

*ஆனால், தற்போதைய திமுக அரசு தொழில் முதலீடுகளை ஈர்க்க எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி குறை கூறினார்.*

*>>>>>><<<<<<*

*திருப்பத்தூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் சார்பில், வரும் 22ஆம் தேதி தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளது.*

*8ஆம் வகுப்பு முதல் பொறியியல் பட்டம் பெற்றவர்கள் வரை இதில் பங்கேற்கலாம் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் – அனுராதா 38 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<<*

*கர்நாடக அணைகளிலிருந்து திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவு அதிகரிக்கப்பட்டதால், தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் காவிரியாற்றில் நீர்வரத்து, வினாடிக்கு ஒரு லட்சத்து 5 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.*

*இதன் காரணமாக, மேட்டூர் அணையின் நீர்மட்டமும், நடப்பாண்டில் ஐந்தாவது முறையாக அதன் முழுக்கொள்ளளவான 120 அடியை எட்டியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் – விஜயகுமார் 50 செகண்ட்ஸ்)*

>>>>>><<<<<<<

இருவரிச் செய்திகள்

ரஷ்யாவுடனான போரை நிறுத்துவதற்காக, அமெரிக்கப் படைகள் யுக்ரைனுக்கு அனுப்பப்படமாட்டாது என்று அந்நாட்டு அதிபர் திரு. டோனல்டு ட்ரம்ப் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<<

பங்களாதேஷ் நாடாளுமன்ற தேர்தலில், விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையை செயல்படுத்த பங்களாதேஷ் தேசியக் கட்சி எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<<

புதுதில்லியில் ஆயுஷ் அமைச்சகத்தின் ராஷ்ட்ரிய ஆயுர்வேத வித்யாபீடம் சார்பில் நடைபெற்ற குழந்தைகளின் நலவாழ்வுக்கான இரண்டு நாள் தேசிய கருத்தரங்கம் நேற்று நிறைவடைந்தது.

>>>>>><<<<<<<

மும்பையில் விநாயகர் சதுர்த்தி, அரசு விழாவாக கொண்டாடப்படுவதை ஒட்டி, அதற்கான இலச்சினையை மஹாராஷ்ட்ர முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் வெளியிட்டார்.

>>>>>><<<<<<<

தமிழகம், புதுச்சேரிக்கு உட்பட்ட 17 மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கான அக்னீவீர் ஆள்சேர்ப்பு முகாம் அடுத்த மாதம் 18 ஆம் தேதி முதல் 27ஆம் தேதிவரை நாகப்பட்டிணத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<<

தமிழகத்தில் காவல்துறை கண்காணிப்பாளர்கள் 3 பேர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

>>>>>><<<<<<<

திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூரில் முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டுக்கான அடையாள அட்டைகளை ஆட்சியர் திருமதி. சிவசௌந்தரவள்ளி பயனாளிகளுக்கு வழங்கினார்.

>>>>>><<<<<<<

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உத்திரமேரூர், ஸ்ரீபெரும்புதூர் உள்ளிட்ட இடங்களில் பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாம் நடைபெறும் என்று மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

>>>>>><<<<<<<

பிளஸ் 2 துணைத் தேர்வு எழுதி, மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான மதிப்பெண் பட்டியல் இணையதளத்தில் இன்று வெளியிடப்படும் என்று அரசு தேர்வுகள் இயக்ககம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<<

சென்னை விமான நிலையத்தில் சுங்கத்துறையினர் நடத்திய சோதனையில் சுமார் இரண்டரை கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது.

>>>>>><<<<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய துப்பாக்கிச் சுடும் போட்டியில், இந்தியாவுக்கு மேலும் மூன்று பதக்கங்கள் கிடைத்துள்ளன.

கஸகஸ்தானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 10 மீட்டர் ஏர்பிஸ்டல் மகளிர் பிரிவில் இந்தியாவின் Kanak Budhwar தங்கப்பதக்கம் வென்றார்.

இதே பிரிவில் Agam Grewal வெள்ளிப்பதக்கம் வென்றார்.

Kanak Budhwar, Agam Grewal மற்றும் Gamberya ஆகியோர் குழுப் பிரிவில் தங்கப்பதக்கம் வென்றனர்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 7 பதக்கங்களை வென்றுள்ளது.

>>>>>><<<<<<<

17 வயதுக்குட்பட்டோருக்கான தெற்காசிய மகளிர் கால்பந்துப் போட்டியில், இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில், இன்று நேபாள அணியை எதிர்கொள்கிறது. இப்போட்டி திம்புவில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும்.

>>>>><<<<<<